


# சமூக ஈடுபாட்டுத் திட்டம்

www.singaporeunited.sg

## என்ன?



### சச்சரவுகளைக் குறைப்பதற்கான மக்கள் கட்டமைப்பு

சமூக ஈடுபாட்டுத் திட்டம், சிங்கப்பூரர்களை ஒன்றுதிரட்டி, நம்பிக்கையையும் புரிந்துணர்வையும் வளர்ப்பதுடன், ஒரு நெருக்கடிக்குப்பின் சமூகத்தில் ஏற்படக்கூடிய சச்சரவுகளைச் சமாளிப்பதற்கான பதில் நடவடிக்கைத் திட்டங்களில் ஈடுபட வைக்கிறது.

### நெருக்கடி நிலைகளை சமாளிப்பதற்கான பதில் நடவடிக்கைத் திட்டங்கள்

ஒரு நெருக்கடி நிலையில், சிங்கப்பூரர்கள் நிலைமையை சமாளிப்பதுடன் ஒற்றுமையாக இருப்பதற்கு உதவும்வண்ணம், சமுதாயம் பதில் நடவடிக்கைத் திட்டங்களை வகுக்கவேண்டும்.

### வெறும் பயங்கரவாத-எதிர்ப்பு நெருக்கடிகால திட்டம் அல்ல

பயங்கரவாதத் தாக்குதல் போன்ற ஒரு நெருக்கடிநிலை, நமது பல-இன பல-சமய சமூகத்தில் சச்சரவுகளையும் பதற்றத்தையும் ஏற்படுத்தக்கூடும். ஒரு நெருக்கடியின் போதும் அதற்குப் பின்னரும் நாம் வலுவுடனும் அதே நேரத்தில் ஒற்றுமையாகவும் விளங்க இந்த சமூக ஈடுபாட்டுத் திட்டம் முனைகிறது. இதன் மூலம் நாம் தொடர்ந்து நல்லிணக்கத்துடன் வாழலாம்.

## ஏன்?



### சிங்கப்பூர் பயங்கரவாத மிரட்டல்களை எதிர்நோக்குகிறது

அமெரிக்காவில் நிகழ்ந்த செப்டம்பர் 11 தாக்குதலும் அதன் பின்னர் உலகின் பல்வேறு பகுதிகளில் நிகழ்ந்த தாக்குதல்களும், இன்றைய பயங்கரவாதம் சமயத்தீவிரவாதத்துடன் அதிக தொடர்பு உடையது என்பதைக் காட்டுகின்றன. இதுபோன்ற தாக்குதல்கள் சமூகங்களுக்கிடையிலான நம்பிக்கையையும் நல்லிணக்கத்தையும் சீரழித்துவிடும்.

ஒரு வேளை, பயங்கரவாதிகள் சிங்கப்பூரில் தாக்குதல் நடத்தினால், சமூக உறவுகளில் ஏற்படக்கூடிய தாக்கத்தைச் சமாளிக்க நாம் தயாராக இருக்க வேண்டும். தற்போது நாம் அனுபவித்துவரும் நம்பிக்கை மற்றும் நல்லிணக்கம் எப்போதுமே நிலைத்திருக்கும் என்று நாம் மெத்தனமாக இருந்துவிடக்கூடாது.

## யார்?



### நீங்கள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும்

ஒற்றுமையான, மீண்டெழக்கூடிய ஒரு சமுதாயத்தை உருவாக்குவதில் உங்கள் பங்கு மிக முக்கியமானது. சமூகங்களுக்கிடையே புரிந்துணர்வை வலுப்படுத்தவும் நல்லுறவை வளர்க்கவும், நீங்கள் சில திட்டங்களுக்கு ஏற்பாடு செய்யலாம் அல்லது அவற்றில் பங்குகொள்ளலாம். அரசாங்கம் இந்த முயற்சிகளை ஒருங்கிணைக்கும்.

துணைப்பிரதமரும் உள்துறை அமைச்சருமான திரு வோங் கான் செங் தலைமைவகிக்கும் அமைச்சர்நிலைக் குழு இந்த சமூக ஈடுபாட்டுத் திட்டத்தினை வழிநடத்துகிறது. உள்துறை அமைச்சு ஒட்டுமொத்த ஒருங்கிணைப்புப் பொறுப்பை ஏற்றிருக்க, 5 அரசாங்க அமைப்புகள் சமூகக் குழுமங்களுக்கு உதவி வழங்கும்.

| குழுமம் | ஆதரவளிக்கும் அமைப்பு |
|---|---|
| சமயக்குழுக்கள், இனம் சார்நத அமைப்புகள் மற்றும் தொண்டூழிய அறப்பணி அமைப்புகள் | சமூக வளர்ச்சி, இளையர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு |
| கல்வி நிலையங்கள் | கல்வி அமைச்சு |
| தகவல் சாதனங்கள் மற்றும் கலைக் குழுக்கள் | தகவல், தொடர்பு மற்றும் கலைகள் அமைச்சு |
| தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழிற் சங்கங்கள் | மனிதவள அமைச்சு |
| அடித்தள அமைப்புகள் | மக்கள் கழகம் |

மக்கள், ஒருவர் மற்றவரை நன்கு புரிந்துகொள்ள ஏதுவாக, குழுமத்திற்குள்ளாகவும் குழுமங்களுக்கிடையிலும் வலுவான தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள நாங்கள் வகைசெய்வோம். இதன் மூலம், ஒரு நெருக்கடியின்போது, மக்கள் அந்நியர்களாக அல்லாமல் தங்களுக்கு முன்னரே பழக்கப்பட்டவர்களுடன் மற்றும் பணியாற்றியவர்களுடன் செயல்திட்டத்தில் ஈடுபடுவார்கள்.

## எப்படி?




### ஈடுபாடு கொள்ளுங்கள்

நாம் அனைவரும் பங்காற்ற வேண்டியுள்ளது. சமூக ஈடுபாட்டுத் திட்டத்தின் மூலம், நாம்:

- நமது சமூகங்களுக்கிடையில் அதிக புரிந்துணர்வை ஏற்படுத்தலாம்;
- நெருக்கடியில் நமது பங்கு என்ன என்று நன்கு அறிந்துகொள்ளலாம்;
- பயிற்சியின் மூலம் ஈடுபாடு கொள்ளலாம்; மற்றும்
- பயிற்சித்திட்டங்களில் பங்குகொண்டு நம்மை ஆயத்தநிலையில் வைத்துக்கொள்ளலாம்.

தொடக்கமாக, வீட்டில் நம் அண்டை வீட்டாருடன், வேலையிடத்தில் நம் சக ஊழியர்களுடன் மற்றும் பள்ளியிலும் விளையாடும் நேரத்திலும் நம் நண்பர்களுடன் நமது பிணைப்பை பலப்படுத்திக்கொள்ள வேண்டும்.

### எங்களிடம் சொல்லுங்கள்

சமூக ஈடுபாட்டுத் திட்டத்தில் கலந்துகொள்ள உங்களுக்கு விருப்பமா, அல்லது எங்களுடன் பகிர்ந்துகொள்ள உங்களிடம் ஏதேனும் யோசனைகள் உள்ளனவா? அப்படி இருப்பின், உடனே எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள் !

**CEP செயலகம்**
**மின்-அஞ்சல்:**
**singaporeunited@mha.gov.sg**



**ஒற்றுமையை வளர்த்தல், மீண்டெழக்கூடிய ஆற்றலை வளர்த்தல்**